பக்கங்கள் 18

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 15 வியாழக்கிழமை 02.11.2023 அதிர்வு 94

## இராணுவ அதிகாரியின் வான் மோதி ஒருவர் பலி

மோட்டார் வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி மரக்கறி கடை ஒன்றில் மோதிய விபத்தில் அங்கு பணிபுரிந்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மாவனல்லை ஹிங்குல பிரதேசத்தில் நேற்று மாலை 04



# கோணேஸ்வரத்தை பெருங்கோயிலாக புனரமைப்புச் செய்ய இந்திய அரசு உதவும்



## நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் திருமலையில் உறுதி வழங்கினார்

- ந.லோகதயாளன் -

“திருக்கேதீஸ்வரத்தைப் புனரமைத்துத் தந்தமை போல் பாடல் பெற்ற மற்றைய ஸ்தலமான திருக்கோணேஸ்வரத்தையும் பெருங்கோயிலாகப் புனரமைக்கும் திட்டம் முன்வைக்கப்படுமானால் அதனை இந்தியா சாதகமாகப் பரிசீலித்து அதற்கு உதவும்.”

- இவ்வாறு உறுதிமொழி வழங்கினார் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் சீமாட்டியார்.

இன்றுமுற்பகல்திருக்கோணேஸ்வரரின் புனித பூமியில் வைத்து இந்த உறுதிமொழியை அவர் வழங்கினார். 04

## யாழ். பல்கலையில் இன்று போராட்டம்




-எஸ்.நிதர்சன், பிரபாகரன் டிலக்சன்-

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களால் இன்று வேலை நிறுத்தப் போராட்டம் 04

### நிதி மோசடி வழக்கிலிருந்து

## நாமல் உள்ளிட்ட ஐவர் விடுதலை



நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 5 பிரதிவாதிகள் கவர்ஸ் கோர்ப்பரேட் நிறுவன சம்பவம் தொடர்பில் சாட்சி விசாரணையின்றி முழுமையாக விடுதலை செய்து கொழும்பு 04

### ஈஸ்டர் தாக்குதல் நட்டஈடு:

## மைத்திரி உள்ளிட்டோருக்கு நீதிமன்றம் அதிரடி உத்தரவு

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் 04



## இரத்தக் காயங்களுடன் பெண்ணின் சடலம் மீட்பு

இரத்தக் காயங்களுடன் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சூரியவெவ வைத்தியசாலையில் நேற்று இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று 04





# திருக்கோணேஸ்வரத்தில் நிர்மலா வழிபாடு

## இந்திய வங்கியையும் திறந்து வைத்தார்

**(அப்துல்சலாம் யாசீம் )**

இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், வரலாற்றுச் சிறப்பு மிக்க திருக்கோணேஸ்வரம் ஆலயத்துக்கு இன்று காலை சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன்போது இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் திருக்கோணேஸ்வரம் ஆலய அறங்காவலர் சபையினர் கலந்துகொண்டிருந்தனர்.

ஆலய வழிபாட்டையடுத்து திருகோணமலை பிரதான வீதியில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இந்திய ளூடீஜ வங்கியை நிர்மலா சீதாராமன் திறந்துவைத்தார்.















# மனித உரிமைகளுக்கு எதிரான செயற்பாடுகள் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அதிகரிப்பு!

## மனித உரிமை செயற்பாட்டாளர் றுக்கி பெர்ணான்டோ தெரிவிப்பு

(த.சுபேசன்)

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மனித உரிமைகளுக்கு எதிரான செயற்பாடுகள் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகிறது என்று பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பிரபல மனித உரிமைகள் செயற்பாட்டாளர் றுக்கி பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

அண்மையில் அவர் யாழ்ப்பாணத்துக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது ஊடகவியலாளரது கேள்விக்குப் பதிலளிக்கும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் தற்போதைய மனித உரிமைகள் நிலவரம் தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

உலகளாவிய ரீதியாகவும் இலங்கையிலும் மனித உரிமைகள் தொடர்பாகப் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறோம்.

மிக முக்கியமாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மனித உரிமைகளுக்கு எதிரான பிரச்சினைகள் காணப்படுகின்றன.அவை அந்த மாகாணங்களுக்கு மாத்திரமான பிரத்தியேகமான பிரச்சினைகளாகவும் உள்ளன.

நான் வடக்கு-கிழக்கில் வாழவில்லை,அங்கு தொழிலும் செய்யவில்லை.ஆனாலும் தொடர்ச்சியாக அந்த மாகாணங்களை சந்திக்கும் ஒரு நபராக இருக்கிறேன்.

இலங்கையின் மற்றைய பிரதேசங்களைப் போன்று வடக்கு - கிழக்கு மாகாணங்களிலும் அரச தரப்பு, அரச படைத்



தரப்புக்களால் ஊடகவியலாளர்கள், நீதிபதிகள், சமூக ஆர்வலர்களுக்கு உயிர் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அரசுக்கு எதிராகக் கேள்வி கேட்பவர்கள், குரல் கொடுப்பவர்கள் அரச அச்சுறுத்தல்களுக்கு ஆளாகின்றனர்.

அரசின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகம் உள்ளனர்.

இதற்கு மிக முக்கிய உதாரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி அரச படைகளால் ஏற்பட்ட அச்சுறுத்தல் காரணமாக தனது பதவியை விட்டு விலகியமையை கூற முடியும்.

குருந்தூர்மலைப் பிரச்சினை, கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழி நடவடிக்கைகளில் முல்லைத்தீவு நீதிபதி தலைமை தாங்கி தன்னுடைய சேவையை வழங்கியிருந்தார்.

அத்துடன் திலீபனுடைய நினைவேந்தலை மக்கள் நினைவு கூர முடியாத நிலை ஏற்பட்டிருந்த போதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவளித்திருந்தார்.

ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்படல், மனித உரிமை ஆர்வலர்கள் காணாமல் ஆக்கப்படல் போன்ற அடிப்படை மனித உரிமை மீறல் செயற்பாடுகள் பல வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடந்த காலங்களில் இடம் பெற்றிருந்தன. இன்றும் இந்த மாகாணங்களில் மனித உரிமைகளுக்கு எதிரான செயற்பாடுகள் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் கொல்லப்பட்ட மக்களின் வழக்குகள் பல இன்றும் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன.

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஊடாக அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன. இந்தச் சட்டம் ஊடாக உயிர் அச்சுறுத்தல் ஏற்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எனது சொந்த அனுபவத்தில் பல பயணத் தடைகளை எதிர்கொண்டுள்ளேன்.

இரணைதீவு என்ற இடத்துக்குச் சொந்தமான மக்களை 25வருடங்களாக அந்த இடத்துக்குச் செல்ல விடாது கடற்படை தடுத்து வைத்திருந்தது.

பொது மக்களை தற்போது அனுமதித்திருந்தாலும் அண்மையில் ஊடகவியலாளர் ஒருவர் அங்கே செல்ல இராணுவம் அனுமதி மறுத்திருந்தது. எனினும் அவர் மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக பயணத் தடை நீக்கப்பட்டிருந்தது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள பயணத் தடைகள் இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் இல்லை. வடக்கு-கிழக்கில் ஒரு சில இடங்களுக்கு இராணுவம் இவ்வாறான பயணத் தடைகளை விதித்துள்ளது.- என்றார்.

# எச்.ஐ.வி. தொற்றாளர்கள் அண்மையில் அதிகரிப்பு!

இந்த வருடத்தின் கடந்த சில மாதங்களில் 485 எச்.ஐ.வி. தொற்றாளங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்தைவிட இந்த வருடம் தொற்றுக்கு ஆளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று தேசிய பாலியல் நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஜானகி விதானபத்திரன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இந்த ஆண்டு 4 ஆயிரத்து 100 எச்.ஐ.வி. நோய்த்தொற்று இனங்காணப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் செப்டம்பர்



இறுதி வரை, 485 புதிய எச்.ஐ.வி. நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது ஒரு அதிகரிப்பாக நாங்கள் பார்க்கிறோம். அரச மற்றும் அரச சாரா நிறுவனங்களுடனான ஒத்துழைப்புடன் எச்.ஐ.வி. பரிசோதனைகள் அதிகளவில் நடத்தப்பட்டன.

இவர்களில் 80 வீதம் ஆண்களே பதிவாகியுள்ளனர். எச்.ஐ.வி. தொற்று 15-49 வயதுக்கு இடைப்பட்டவர்கள் மத்தியிலேயே அதிகரித்துள்ளது.

டிசெம்பர் முதலாம் திகதி உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு எயிட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தால் பொது மக்களை அறிவூட்டும் விசேட வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று வைத்தியர் ஜானகி விதானபத்திரன மேலும் குறிப்பிட்டார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இராணுவ அதிகாரியின்...

இடம்பெற்றுள்ளது.

அந்த வாகனத்தை ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் ஒருவரே செலுத்தியுள்ளார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர், மாவனல்லை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். இவர் மாவனல்லை, ஹிங்குல பிரதேசத்தில் வசிக்கும் 34 வயதுடைய திருமணமானவர்.

அந்த மோட்டார் வாகனம் கொழும்பிலிருந்து கண்டி நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது சாரதியால் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் வீதியை விட்டு விலகி காய்கறி கடையை மோதி பலத்த சேதத்தை விளைவித்ததுடன் அருகிலிருந்த தொலைபேசிக் கம்பத்திலும் மோதியது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் மாவனல்லை ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

வாகனத்தைச் செலுத்திய மத்தேகொட பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதுடைய ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஜெனரலைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## கோணேஸ்வரத்தை...

மூன்று நாள் பயணமாக இலங்கை வந்துள்ள நிர்மலா சீதாராமன் இன்று காலை திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டார்.

ஆலய நிர்வாகிகள் அவரை வரவேற்று உரையாடினர். அகில இலங்கை இந்துமா மன்றத்தின் துணைத் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் அப்போது ஆலய நிர்வாகிகள் சார்பில் ஒரு கோரிக்கையை முன்வைத்தார்.

போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டு, ஒல்லாந்தரால் சூறையாடப்பட்ட திருக்கோணேஸ்வரம் ஆலயத்தை இன்று ஓரளவு பேணிப் பாதுகாக்கின்றோம். இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயத்தையும் மன்னார் திருக்கேதீஸ்வரம் போன்று கருங்கற்களால், பெருங்கோயிலாகப் புனரமைத்துத் தர இந்தியா முழு உதவி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் திருக்கோணேஸ்வரம் ஆலய நிர்வாகத் தலைவர் துசியந்தன் உட்படப் பலரும் அந்த உரையாடலின்போது உடனிருந்தனர்.

“எமது கோரிக்கையைச் செவிமடுத்த இந்திய நிதி அமைச்சர், மன்னார் திருக்கேதீஸ்வரம் போன்று கோணேஸ்வரத்தையும் புனரமைக்க உதவ முடியும் என்று தெரிவித்தார். அதற்கான முன்னேற்பாடுகள், முறைப்படியான கோரிக்கைகள், அனுமதிகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நிர்மலா சீதாராமன் அம்மையார் உற்சாகத்தோடு தெரிவித்தமை எமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது” – என்று ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

## மத்திரி உள்ளிட்டோருக்கு...

நிலந்த ஜயவர்தன ஆகியோர் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை சத்தியக் கடதாசிகள் ஊடாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றம் இன்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பான வழக்கில் உத்தரவிடப்பட்ட நட்டஈட்டை முழுமையாக வழங்க இவர்கள் தவறியுள்ளனர்.

இந்நிலையிலேயே சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைச் சத்தியக் கடதாசிகள் ஊடாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

## இரத்தக்காயங்களுடன்...

சூரியவெவ பொலிஸார் இன்று ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

சூரியவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

சடலத்தைப் பரிசோதித்த போது வலது முழங்கையில் காயம் ஏற்பட்டு வலது காதில் இரத்தம் கசிந்துள்ளது என்றும், இது சந்தேகத்துக்குரிய மரணம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சூரியவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நாமல் உள்ளிட்ட...

மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முறைப்பாட்டு தரப்பு வழங்கிய சாட்சியங்கள் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ள முடியாதவை எனவும், அவற்றில் நம்பிக்கை இல்லை எனவும் அறிவித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க இன்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அத்துடன், தற்போது நீதிமன்றத்தைத் தவிர்த்து வரும் வழக்கின் இரண்டாவது பிரதிவாதியான பிரபாத் கருணாஜீவவுக்கும், நான்காம் பிரதிவாதிக்கும் விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பயணத் தடையை உடனடியாக நீக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் பிரபாத் கருணாஜீவவை கைது செய்யுமாறு விடுக்கப்பட்ட திறந்த பிடியாணையை மீளப் பெறுமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய போது முறைகேடாக ஈட்டிய 3 கோடி ரூபா பணத்தை கவர்ஸ் கோர்ப்பரேட் நிறுவனத்தில் பயன்படுத்தியமை ஊடாகப் பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். பல்கலையில்...

மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் பல்கலைக்கழக முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

நாடு தழுவிய ரீதியில் 17 அரச பல்கலைக்கழகங்களிலும் இன்று அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்தவகையில் யாழ். பல்கலைக்கழகத்திலும் வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் மதியம் 12 மணியளவில் யாழ். பல்கலைக்கழக முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

சம்பளப் பிரச்சினைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் நிதியில் உள்ள குறைவு போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து இந்த வேலைநிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று நாவலவிலுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக வளாகத்தில் அரச சேவை தொழிற்சங்கக் கூட்டமைப்பு மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் என்பன இணைந்து நடத்திய கூட்டத்தின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.








# யுனெஸ்கோவின் தற்காலிக பட்டியலில் இந்தியாவின் 50 வரலாற்றுச் சின்னங்கள்

**(ந.லோகதயாளன்)**

இந்தியா பல்வேறு பாரம்பரிய வரலாற்றுச் சின்னங்களை கொண்டுள்ளது. அவற்றில் சில யுனெஸ்கோ உலக பாரம்பரிய சின்னங்களின் கீழ் வருகின்றன. மேற்கு வங்காளத்தில் உள்ள ரவீந்திரநாத் தாகூரின் சாந்திநிகேதன் மற்றும் கர்நாடகாவில் உள்ள ஹொய்சாலாக்களின் புனித குழுமங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டதால், இந்தியாவின் வரலாற்றுச் சின்னங்களது எண்ணிக்கை இப்போது 42 ஆக உள்ளது. தேசிய தலை நகரில் இதுபோன்ற மூன்று கலாச்சார பண்புகள் உள்ளன.

உலக பாரம்பரிய சின்னங்களின் தனித்துவமான அம்சம், அதன் வரலாற்றுத் தன்மையுடன் இந்தியாவின் பல்வேறு கட்டடக்கலை திறமை மற்றும் கலாச்சார ஆழத்தின் கண்காட்சி ஆகும்.

இந்தியாவில் 34 கலாச்சார தளங்கள், 7 இயற்கை தளங்கள் மற்றும் 1 கலப்பு தளம் ஆகியவை இயற்கை மற்றும் கலாச்சார முக்கியத்துவத்தை கொண்டுள்ளது.

மேலும், பர்சாஹோமில் உள்ள கற்கால குடியேற்றம் முதல் டெல்லியின் பஹாய் கோவில்வரை இந்தியாவில் உள்ள 50 சின்னங்கள் யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தற்காலிக பட்டியலில் உள்ளன.

சாந்திநிகேதன் எடுத்துக்காட்டாக அதன் புதிய நிலையின் விளக்கத்தை உள்ளடக்கியது. 1901 இல் நோபல் பரிசு பெற்ற, கவிஞரும், தத்துவஞானியுமான ரவீந்திரநாத் தாகூரால் நிறுவப்பட்டது. சாந்திநிகேதன் பண்டைய இந்திய மரபுகளின் அடிப்படையில் நிறுவப்பட்ட கலைக்கான மையமாக இருந்தது. மேலும் இது மதங்களுக்கு அப்பாற்பட்ட மனிதகுலத்தின் ஒற்றுமையின் பார்வையை வெளிப்படுத்தியது. மற்றும் கலாச்சார வேறுபாடுகள்.

1921 ஆம் ஆண்டில், சாந்திநிகேதன் ஒரு “உலகப் பல்கலைக்கழகம்” மற்றும் “விஸ்வ பாரதி” என்று அறியப்பட்டது. மேலும் வடிவத்திலும் ஆவியிலும் நடைமுறையில் இருந்த ஐரோப்பிய வழிகளில் இருந்து பிரித்தானிய நவீனத்துவம் மற்றும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் காலணித்துவ கட்டடக் கலை நோக்கு நிலைகளில் இருந்து தன்னைக் குறித்தது.

யுனெஸ்கோவால் பட்டியலிடப்பட்ட ஒரு உலக பாரம்பரிய தளமானது புவியியல் ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் அதன் கலாச்சார அல்லது உடல் முக்கியத்துவம் காரணமாக தனித்து நிற்கும் ஒரு தனித்துவமான அடையாளமாக இருக்க வேண்டும்.

இந்தத் தளங்கள் யுனெஸ்கோ உலக பாரம்பரியக் குழுவால் நிர்வகிக்கப்படும் சர்வதேச உலக பாரம்பரியத் திட்டத்தால் பராமரிக்கப்படுகின்றன.

டில்லியின் ‘வாழும் நகரம்’ அதன் வளாகத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான பல்வேறு நிலைகளில் பாதுகாக்கப்படுகிறது. நகரத்தின் எஞ்சியிருக்கும் வரலாற்று நகர்ப்புறக் காட்சியில் நான்கு பகுதிகள் உள்ளன. மெஹ்ராலி, நிஜாமுதீன், ஷாஜஹானாபாத் மற்றும் புது டில்லி. அவை தங்கள் வரலாற்றுத் தன்மையைத் தக்கவைத்துள்ளன. டில்லி வரலாற்று ரீதியாக முக்கோண வடிவில் ஒரு பக்கம் யமுனை நதியையும் மறுபுறம் ஆரவல்லி மலைத் தொடரையும் ஒட்டி வளர்ந்தது.

கூடுதலாக, டில்லி ஒரு முக்கியமான வர்த்தகப் பாதையில் மூலோபாய ரீதியாக அமைந்துள்ள ஒரு பகுதியாகும். இது கங்கைச் சமவெளியில் ஓடிபட்டுப் பாதையுடன் இணைக்கப்பட்டது.

தொல்பொருள் கண்டுபிடிப்புகள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.மு. நான்காம் நூற்றாண்டுவரை முகலாயர் சகாப்தம்வரை ஏராளமான கலாச்சார அடுக்குகளை வெளிப்படுத்துகின்றன. மேலும் மட்பாண்டத் துண்டுகள் கி.மு. 1000-500 இற்கு முந்தையவை.

மெஹ்ராலி, நிஜாமுதீன், ஷாஜஹானாபாத் மற்றும் புதுடில்லி ஆகிய இடங்கள் டெல்லியை உலக பாரம்பரிய நகரத்துக்கான பரிந்துரையைப் பெற முன்மொழியப்பட்டுள்ளன. ஆனால் இப்போதைக்கு, இந்த வளாகங்கள் நகரத்தின் மூன்று உலக பாரம்பரிய தளங்களைக் கொண்டுள்ளன.

1983 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ள பாரம்பரிய பாதுகாப்புக் குழுவுக்கு 2004 ஆம் ஆண்டு இந்திய உச்ச நீதிமன்றத்தால் டில்லியில் உள்ள பாரம்பரிய கட்டடங்கள், பாரம்பரிய வளாகங்கள் மற்றும் இயற்கை அம்சப் பகுதிகளைப் பாதுகாப்பதற்கான விதிகளை உள்ளடக்கிய புதிய நோக்கு நிலை வழங்கப்பட்டது.

செங்கோட்டை வளாகம், ஹுமாயூனின் கல்லறை மற்றும் குதுப் மினார் மற்றும் அதைச் சுற்றியுள்ள கட்டமைப்புகள் ஆகியவை தேசியத் தலைநகரில் உள்ள உலக பாரம்பரிய தளங்களாகும்.

இவற்றில் பழமையானது குதுப்மினார். 13 ஆம் நூற்றாண்டில் அப்போதைய டில்லிக்கு தெற்கே சில கிலோ மீற்றர் தொலைவில், 72.5 மீற்றர் உயரமுள்ள சிவப்பு மணற்கல் கோபுரம் அமைக்கப்பட்டது.

இந்த கோபுரம் அதன் அடிவாரத்தில் 14.32 மீற்றர் விட்டத்தில் இருந்து அதன் உச்சத்தில் 2.75 மீற்றர்வரை குறைகிறது, மேலும் மாறி மாறி கோண மற்றும் வட்டமான புல்லாங் குழல்களைக் கொண்டுள்ளது.

குதுப் மினார் அடித்தளம் 1192 இல் குதாப்-உத்-தின் ஐபக், டில்லியின் கடைசி இந்து சாம்ராஜ்யத்தை வென்ற உடனேயே அமைக்கப்பட்டது. இது 1193 இல் இல்துமிஷ் என்பவரால் முடிக்கப்பட்டது.

சுற்றியுள்ள தொல்பொருள் பகுதி இறுதிச் சடங்கு கட்டடங்களைக் கொண்டுள்ளது. 1311 இல் கட்டப்பட்ட அலை-தர்வாசா, இந்தோ-முஸ்லிம் ஆப்கானிய கட்டடக் கலையின் தலை சிறந்த படைப்பாக விளங்குகிறது. சுற்றியுள்ள நினைவுச் சின்னங்களில் இரண்டு மசூதிகள் அடங்கும், அவற்றில் ஒன்று வட இந்தியாவில் பழமையானது (குவ்வத்துல்-இஸ்லாம்).

இந்த நினைவுச் சின்னங்கள் முன்பு இருந்த கிட்டத்தட்ட 20 இந்து கோவில்களின் எச்சங்களிலிருந்து கட்டப்பட்டுள்ளன.

ஐ.ஏ.என்.எஸ். முன்னதாக டில்லி பல்கலைக்கழக வரலாற்றாசிரியர் மற்றும் பேராசிரியர் விபுல் சிங்கை அணுகி, “கோயில்கள் ஒரு பிராந்தியத்தின் ஆட்சியாளர்களுடன் அடையாளம் காணப்பட்டன. அந்தக் கோயில்களில் ஏராளமான செல்வங்கள் மறைந்

**(7ஆம் பக்கம் பார்க்க)**

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஆக்கிரமிப்பு அடாவடித்தனம்

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள சில கட்டமைப்புக்கள் மற்றும் பௌத்த பிக்குகளுடன் இணைந்து தொல்பொருள் திணைக் களம் இப்பிரதேசத்தின் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் வணக்க ஸ்தலங்களைக் கைப்பற்று வதற்கு வசதி ஏற்படுத்துகின்றது.

- இப்படி சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்த ஆணைக்குழுவின் ஆணையாளர்களான ஸ்டீஃபன் ஸ்னெக் மற்றும் டேவிட் கெரி ஆகியோர் கடந்த மாதம் இலங்கைக்கு வருகை தந்து கொழும்பு, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்டு, மத சுதந்திரம் தொடர்பில் நிலவும் கரிசனைகள் பற்றி ஆராய்ந்தனர். அது மாத்திரமன்றி சர்வமதத் தலைவர்கள், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டா ளர்கள், அரசாங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை சந்தித்து கலந்துரை யாடல்களையும் முன்னெடுத்திருந்தனர்.

அதன் பின்னரே இந்தக் கருத்தை அவர்கள் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கின்றார்கள்.

இந்த நாட்டில் வாழும் சிறுபான்மையினரான இந்து, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கான மத சுதந்திரத்தை உறுதிசெய்யும் வகையில் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது நடைமுறையிலுள்ள 'ஒடுக்குமுறை' கொள்கைகள் மற்றும் சட்டங்களை முற்றாக நீக்கவோ அல்லது திருத்தியமைக்கவோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அந்த ஆணையாளர்கள் வலியுறுத்தியுள்ளமை கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

சிறுபான்மையினரின் மத உரிமைகளைக் கட்டுப்படுத்துவதற்காக பயங்கரவாதத் தடைச் சட்டம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச பட்டய சட்டம் போன்ற வற்றைப் பயன்படுத்துகிறது இலங்கை அரசு.

இவ்வாறு இனம், மதம் சார்ந்த தனிநபர்களின் கருத்துக்களை பொறுத்துக் கொள்ள முடியாத காரணத்துக்காக அவர்கள் கைது செய்யப்படும் போது அவர்களை 'மனசாட்சியின் கைதிகள்' என்று குறிப்பிட்டு, அவர்கள் குறித்தும் அந்த ஆணையாளர்கள் கருத்து வெளியிட்டு இருக்கி றார்கள்.

இந்த வகையில் அடங்கும் மனித உரிமை செயற்பட்டாளர்கள், மத சிறுபான்மையினர் போன்றோர் அரச அதிகாரிகளினால் தொடர் கண்காணிப்பின் கீழ் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கின்றனர் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டி இருக்கின்றனர்.

ஆனால், யார், எந்த உண்மையை, எந்த மட் டத்தில் எடுத்துரைத்தாலும், பௌத்த, சிங்க ளப்பேரினவாதம் தனது ஆக்கிரமிப்பு அடா வடித்தனத்தை கைவிடாது. ஏனென்றால் நாய் வாலை நிமிர்த்த முடியாது.

## கல்முனையில் சனியன்று முப்பெரும் நூல் வெளியீடு!

( வி.ரி.சகாதேவராஜா)

பாண்டிருப்பு அறிஞர் அண்ணா மன்றம் நடத்தும் முப்பெருநூல் வெளியீட்டு விழா சனிக்கிழமை மன்ற மண்டபத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலர் ரி.ஜே. அதிசயராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக மொழித் துறைப் பேராசிரியர் செ. யோகராஜா முன்னிலையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வே.ஜெகதீசன், கிழக்கு பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ச. நவநீதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இங்கு சரவணமுத்து கணேசமூர்த்தி எழுதிய "உயிர்ப்பின் முகவரி" சிறுகதை தொகுப்பு நூல், திருமதி தனலட்சுமி முரசொலிமாறன் எழுதிய "அரசியல் சமூகவியல் அறிமுகமும்" ஆய்வு கட்டுரை தொகுப்பு நூல், சரவணமுத்து நரேந்திரன் எழுதிய "தாயும் தமிழும்" கவிதை தொகுப்பு நூல் ஆகிய மூன்று நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

## மலை நாட்டில் தொடர் மழை' மவுஸ்சாக்கலையில் நீர் உயர்வு!



(மஸ்கெலியா நிருபர்)

கடந்த சில நாள்களாக மத்திய மலை நாட்டில் கனத்த மழை பெய்து வருவதால் நீர் தேக்க பகுதிகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளது.

இதனால் மவுஸ்சாக்கலை நீர் தேக்கத்துனக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதன் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.

மவுஸ்சாக்கலை நீர் தேக்கத்தின் நீர் மட்டும் அதன் கொள்ளளவை எட்டும் நிலையில் உள்ளது.

இன்னும் மூன்று அடி நீர் நிரம்பும் பட்சத்தில் அது கொள்ளளவை எட்டும்.

தற்போது பெய்து வரும் மழையின் நீரைக் கொண்டு கென்யோன் நீர் மின் நிலைய நீர் மின் உற்பத்தி அதிக ரித்து உள்ளது.

அந்த நிலையத்தில் உள்ள அனைத்து நீர் மின் இயந்திரங்கள் மின் உற்பத்தி செய்யும் பணியில் இலங்கை மின்சார சபை முன் வந்து உள்ளது.

அதேபோல் லக்சபான பொல்பிட்டிய நவலக்சபான கலுகல ஆகிய நீர் மின் உற்பத்தி நிலையங்களிலும் நீர் மின் உற்பத்தி அதிகரித்து உள்ளது.

மேலும் காசல்ரீ மேல் கொத்மலை ஆகிய நீர் தேக்கங்களுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் கென்யோன் விமலசுரேந்திர மேல் கொத்மலை ஆகிய நீர் தேக்கங்க ளின் வான் கதவுகள் வழியாக நீர் வெளியேற்றம் செய்யப் படலாம். ஆகையால் தாழ் நிலப் பகுதியில் உள்ள அனைத்து மக்களும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என நுவரெலியா மாவட்ட அரச அதிபர் நந்தன கலபட தெரிவித்துள்ளார்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"எவரொருவர் மரங்களை நாட்டுகின்றாரோ, அவர் தன்னைவிட மற்றவர்களை அதிகம் நேசிப்பவராவார்."

-தோமஸ் ஃபுல்லர் (இங்கிலாந்து வரலாற்றாளர்)

# யுனெஸ்கோவின் தற்காலிக...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருந்தன. முஸ்லீம் படையெடுப்பாளர்கள் கோவில்களை சூறையாடினர், பின்னர் அவர்கள் கோவில்களை இடித்து அதன் மீது தங்கள் சொந்த மசூதிகளை கட்டுவதற் குப் பொருள்களைப் பயன்படுத்தினர்.

இரண்டாவதாக, ஹுமாயூனின் கல்லறை டெல்லியின் முதல் பெரிய வம்ச கல்லறை என்று கூறப்படுகிறது, இது முகலாய கடடக் கலைக்கு முன்னோடியாக மாறியது. இது 1560 களில் ஹுமாயூனின் மகனான அக்பரின் ஆதரவின் கீழ் கட்டப்பட்டது.

பாரசீக மற்றும் இந்திய கைவினைஞர்கள் இந்தத் தோட்ட கல்லறையை நிறைவேற்ற ஒன்றிணைந்தனர். இது இஸ்லாமிய உலகில் மிகப்பெரிய கல்லறையாக நம்பப்படுகிறது. இந்த கல்லறை குர்ஆன் சார்பாக்கை பிரதிபலிக்கிறது. நான்கு ஆறுகள் கொண்ட தோட்டம் சொர்க்கத்தில் இருப் பதாக கூறப்படுகிறது.

இந்தக் கட்டடக்கலைப் பாணி பல கட்டடங்களுக்கு உத்வேகம் அளித்தது.

மூன்றாவதாக, ஷாஜஹானால் 1639 முதல் 1648 வரை கட்டப்பட்ட செங்கோட்டை வளாகம், இந்தியாவின் ஐந்தாவது முகலாய பேரரசரின் புதிய தலைநகரான ஷாஜஹானாபாத் நகரின் அரண்மனை கோட்டையாகும். கோட்டையைச் சுற்றியுள்ள சிவப்பு மணற்கல் சுவர்களால் வகைப்படுத்தப்படுகிறது.

இது 1546 இல் இஸ்லாம் ஷா சூரி கட்டிய பழைய சலிம்கர் கோட்டைக்கு அருகில் உள்ளது. இரண்டு கோட் டைகளும் சேர்ந்து செங்கோட்டை வளாகத்தை உருவாக்குகின்றன. செங் கோட்டை பின்னர் பிரிட்டிஷ் இராணு வத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு பயன் படுத்தப்பட்டது.

டில்லியில் மூன்று உலக பாரம்பரிய தளங்கள் மட்டுமே உள்ளன என்றாலும், உள்ளூர் மற்றும் சர்வதேச பார்வையாளர்களுக்கு சுற்றுலா தலமாக விளங்கும் ஏராளமான வரலாற்று கட்டமைப்புகள் உள்ளன.

உலக பாரம்பரிய தளத்தின் குறிச்சொல், இந்த நீடித்த பழங்காலத் துண்டுகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது. ஆனால் எந்தவொரு பாதுகாப்பு முத்திரையும் இல்லாத பல நினைவுச் சின்னங்கள் வரலாற்றின் எதிரொலியாக இல்லை.

# 8,428 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் முல்லைத்தீவில்!

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவில் வாழும் குடும்பங்களில் 8 ஆயிரத்து 428 குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என்று தகவல் அறியும் சட்டத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் 6 பிரதேச செயலர் பிரிவுகள் கீழும் தற்போது 45 ஆயிரத்து 927 குடும்பங்கள் வாழ்கின்றனர். இவ்வாறு வாழும் குடும்பங்களில் 8 ஆயிரத்து 428 குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என்று தகவல் அறியும் சட்டத்தின் மூலம் கண்டுகொள்ளப் பட்டுள்ளது.

முல்லைத்தீவில் வாழும் 8 ஆயிரத்து 428 பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் கரைத்துரைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 612 குடும்பங்களும், புதுக்குடியிருப்பில் 2 ஆயிரத்து 489 குடும்பங்களும், ஓட்டுசுட்டானில் ஆயிரத்து 320 குடும்பங்களும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக காணப்படுகின்றன.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 821 குடும்பங்களும் மாந்தை கிழக்கில் 502 பெண் தலைமைக் குடும்பங்களுடன் வெலிஓயாவில் 683 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் உள்ளன என்று மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.

இதேநேரம் இந்த மாவட்டத்தில் உள்ள 8 ஆயிரத்து 428 பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் கணவர் உயிரிழப்பின் காரணமாக 5 ஆயிரத்து 710 பெண்களும், கணவர் பிரிந்து வாழ்வதால் ஆயிரத்து 577 பெண்களும், போரில் கணவர் காணாமல் போனதால் 195 பெண்களும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக உள்ளன. போரின் காரணமாக 874 பெண்களின் கணவர்மார் உயிரிழந்தனர் என்று மாவட்டச் செயலகம் வழங்கிய தகவல் அறியும் சட்டத்தின் கீழான பதிவில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு வாழும் பெண் தலை மைத்துவக் குடும்பங்களில் 210 குடும்பங்கள் வெளிநாட்டு உதவிகளின் மூலமும், 471 குடும்பங்கள் அரச உத்தியோக வருமானத்தின் மூலமும், ஏனையோர் சமுர்த்தி மற்றும் அரச உதவிகளை மட்டுமே நம்பி வாழ்வதாகவும் தகவல் அறியும் சட்டத்தின் மூலம் அறிய முடிகிறது.





# வவுனியா பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக்கூட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம)

இவ்வருடத்திற்கான ஐந்தாவது பிரதேச செயலக அபிவிருத்தி குழுக் கூட்டம் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான குலசிங்கம் திலீபன் தலைமையில் கிராமியப் பொருளாதார ராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் பங்கேற்போடு வவுனியா வடக்கு பிரதேச செயலர் ஐ. பிரதாபன் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

நடைபெற்று முடிந்த பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் மீள் பரிசீலனை செய்யப்பட்டது.

நிகழ்வில் கமநல அபிவிருத்தி திணைக்களம் சார்ந்த பிரச்சினைகளும், விவசாய விரிவாக்கல், கல்வி, கூட்டுறவு, கால்நடை உற்பத்தி, காணி மற்றும் சுகாதாரம் போன்ற முக்கியமான விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன.





## 3 லட்சத்து 85 ஆயிரம் ரூபா நிதியில்

# கெருடாவில் பாடசாலைக்கு குடிதண்ணீர் தொகுதி அமைப்பு


## தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் வழங்கியது

சந்நிதியான் ஆச்சிரமம் கெருடாவில் இந்துத் தமிழ் கலவன் பாடசாலைக்கு 3 லட்சத்து 85 ஆயிரம் ரூபா நிதியில் சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீர் தொகுதியை வழங்கியுள்ளது.

மாணவர்களுக்கான சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீர் செயற்றிட்டத்துக்கு அமைவாக சந்நிதியான் ஆச்சிரமத்தால் கெருடாவில் இந்து தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 144 மாணவர்களின் பயன்பாட்டுக்கென இந்த நீர் சுத்திகரிக்கும் இயந்திரம் பொருத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலை முதல்வர் சு.சுதாகரன், பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் என பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.



ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாகச் சென்று இந்தக் குடி தண்ணீர் செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.




# ஒலி அமைப்புக் கருவி அன்பளிப்பு

மாகாணத் தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையத்துக்கு லண்டன் ரட்ணம் நிதியத்தால் ஒலி அமைப்புக் கருவி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

வவுனியாவடக்குமரக்காரம்பளையில் அமைந்துள்ள வடமாகாண தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையத்துக்கு அமைப்பின் ஸ்தாபகர் வைத்திய கலாநிதி நித்தியானந்தன் இந்த ஒலி அமைப்பை வழங்கியுள்ளார்.

அமைப்பின் சார்பில் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் நிலையத்தின் முகாமையாளர் கலாநிதி மா.தயாகரனிடம் அதனைக் கையளித்தார்.

நிலையத்தில் நடைபெறும் செயலமர்வுகள், பயிற்சி பட்டறைகள், கருத்தரங்குகள் போன்றவற்றுக்கு இது உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# எதிர்கால உலகை நாம் வெல்வதற்கு கல்விப் புலம் பரிமாணம் பெறவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவிப்பு



பேரிடர்காலங்களையும், உலக ஒழுங்கையும் இலகுவில் எதிர்கொள்ளக் கூடிய எதிர்கால சமூகத்தின் உருவாக்கம் ஒன்று அவசியம். அதற்காக மாண வர்களை முதலீடாகக் கொண்ட உற்பத் தியாளர்களான ஆசிரியர்கள் உள்ளிட்ட கல்விப்புலம் சார்ந்தோர், கல்விக் கொள்கைகளிலும் சிந்தனைகளிலும் புதிய அணுகு முறைகளைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில், கிளிநொச்சி தர்மபுரம் இல.01 அ.த.க. பாடசாலையில் நடை பெற்ற 65 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் முதன்மை விருந்தின ராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந் தார்.

அவரது உரையில் மேலும் தெரிவித் துள்ளவை வருமாறு–

மாணவர்களின் ஆரம்பக் கல்விப் பருவத்திலேயே, அவர்களது ஆளுமை விருத்திக்கான அத்தனை களங்களும் திறக்கப்பட வேண்டும்.

உயர்தர மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுக ளுக்கு சற்றும் குறைவில்லாத வகையில் இந்த ஆரம்பப் பாடசாலையின் நிகழ்வு மிகநேர்த்தியாக ஒழுங்கமைக்கப்பட் டுள்ளது.

இந்த நிகழ்வின் தரம் உயர்ந்து நிற்பதற்கு பாடசாலை அதிபரின் ஆளு மையும், ஆசிரியர்கள் மற்றும் பெற் றோர்களின் கூட்டிணைவும்தான் காரணம். இத்தகைய புறச்சூழலில் வள ரும் குழந்தைகள்தான் ஆளுமையும் தலைமைத்துவமும் மிகுந்த குழந்தைக ளாக உருவாகுவர்.

உலகியல் அறிவோ, கூருணர்வுப் பார்வையோ, எதிர்காலம் பற்றிய தெளிவோ இல்லாது புத்தகப் பூச்சிகளாக வளர்க்கப்படும் பிள்ளைகள், உரிய வழி காட்டல்கள் இன்மையால், பல் கலைக் கழகக் கற்கை நெறிகளைத் தெரிவு செய்வதில் கூட தவறிழைக்கிறார்கள்.

குறிப்பாக யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்க ளிலும், கிளிநொச்சி மற்றும் திருகோ ணமலை வளாகங்களிலும் ஒவ்வொரு துறைகளிலும் பல்வேறு கற்கை நெறித் தெரிவுகள் உள்ளபோதும், வட, கிழக் கிலுள்ள தமிழ் மாணவர்கள் தத்தம் துறைசார்ந்த முதன்மைக் கற்கை நெறிகளுக்கு மட்டுமே விண்ணப்பிக்கின் றனர். இதனால் ஏனைய கற்கை நெறிக ளைத் தொடர்வதற்கான வாய்ப்புகள் தவறவிடப்படுகின்றன.

இது தொடர்பிலான தெளிவையும், வழி காட்டலையும் எமது மாணவர்க ளுக்கு வழங்க வேண்டிய தேவை உள்ளது.

சமநேரத்தில் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கில பாடத்தில் ஆகக் குறைந்த திறமைச் சித்தியையேனும் பெற்றுக் கொள்ள மாணவர்களும், அவர்களை வழிப்படுத்துகின்ற ஆசிரி யர்களும் முயற்சிக்க வேண்டும்.

இதன் மூலம் பல்கலைக்கழக வாய்ப்பைப் பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும். – என்றார்.

பாடசாலை அதிபர் பரமநாதன் தவநேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக உயிரி யல் மருத்துவ விஞ்ஞானி திருமதி. துர்க்கா ஜெயரட்ணமும், கௌரவ விருந் தினர்களாக கரைச்சிப் பிரதேச நிர்வாக கிராம அலுவலர் சண்முகம் சந்திரன், ஓய்வுநிலை கிராம அலுவலர் சி.பரம தாஸ் ஆகியோர் உட்பட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் கலந்துகொண்டனர்.









# கல்முனை பிராந்தியத்துக்கு மருத்துவ ஆய்வுகூடம் திறப்பு!

(அபு அலா,
நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்தியத்துக்கான மருத்துவ ஆய்வுகூடம் பாலமுனை பிரதேச வைத்தியசாலை கட்டடத்தில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் திறந்து வைத்தார்.



மிகக் குறைந்தளவிலான நிதியைக் கொண்டும், பிராந்திய சுகாதார நிறுவனங்களிலுள்ள வளங்களைக் கொண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த பிராந்திய ஆய்வு கூடத்தில் பிராந்திய வைத்திய சாலைகளில் எடுக்கப்படும் நோயாளர் களின் குருதி மற்றும் மாதிரிகள் பரிசோதனை செய்யப்படவுள்ளன.

இங்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் அறிக்கைகள் உரிய நேரத்துக்குள் சம்மந்தப்பட்ட நோயாளிகளுக்கு குறுஞ்செய்தி ஊடாகவும் அனுப்பி வைக்கப்படவுள்ளன. இந்த ஆய்வு கூடத்தின் ஊடாக பிராந்திய மக்கள் பெரிதும் நன்மையடையவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் முதலாவது பிராந்திய ஆய்வு கூடத்தைக் கல்முனை பிராந்தியத்தில் திறந்து வைத்ததன் மூலம் தேசிய ரீதியில் கல்முனை சுகாதார சேவைகள் பணிமனை முக்கியத்துவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் மெலிண்டன் கொஸ்தா, நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.பீ.அப்துல் வாஜித் உள்ளிட்ட பல வைத்தியர் கலந்து கொண்டனர்.



# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் இறக்காமம் கிளைகள் புனரமைப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீமின் விசேட பணிப்புரையில், இறக்காமம் பிரதேசத்தில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் புனரமைப்புச் செய்வதற்கான கூட்டம் 08 மற்றும் 09 ஆம் கிராம சேவகர் பிரிவுகளில் (29) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளர், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, அம் பாறை மாவட்ட குழுவின் செயலாளர் ஏ.சி. சமால்தீன், உறுப் பினர் ஆசிரியர் ஏ.பீ. நியாஸ், இறக்காம அமைப்பாளர் எஸ்.எல். நிஸார், இறக்காம பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.எல். முஸ்மி உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.




வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VANRENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882





# முள்ளிவாய்க்கால் - காசா பேரவலம்: முடிவின்றித் தொடரும் இனப்படுகொலை!

■ நவீனன்

**(இன்று காசாவில் நிகழ்வது போல அன்று 2009இல் முள்ளிவாய்க்காலில் பாரிய மானுடப் பேரவலம் நிகழ்ந்தது. முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நிறுத்தாமல் உலகம் கண்மூடி மௌனித்திருந்தது. இன்றைய காசா பேரவலத்தை உலகம் கண்டித்தாலும், போரைத் தடுக்க முடியாமல் கைகட்டி வேடிக்கை பார்க்க வேண்டிய நிலையில் உள்ளது.)**

தொடரும் வான்வழித் தாக்குதல்கள், மறுபுறம் உணவு, உயிர் உத்தவாதம், மருத்துவ வசதிகள் இன்றிப் பச்சிளங் குழந்தைகள் உட்பட பாலஸ்தீன மக்களின் பரிதாப நிலை பாரிய அவலமாகியுள்ளது.

இன்றைய காசா போல அன்று 2009 இல் முள்ளிவாய்க்காலில் பாரிய மானுடப் பேரவலம் நிகழ்ந்தது. முள்ளிவாய்க்கால் அதுவொரு காலப் பெருந்துயரம் என்றே வரலாற்றில் பதியப்படும்.

கொத்துக் கொத்தாய் கொன்று அழிக்கப்பட்ட தமிழ் மக்களின் குருதி படிந்து சிவந்த நிலமே முள்ளிவாய்க்கால். பல ஆண்டுகளாக தம் இருப்புக்காய் இனத்தின் விடுதலைக்காய் போராடிய ஒரு இனக்கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாய் கொத்துக் குண்டுகளுக்கும் எறிகணைகளுக்கும் இரையாக்கப்பட்ட 2009 மே 18 நாளாகும்.

முள்ளிவாய்க்கால் மண்ணும் மே 18 ஆம் நாளில் ஈழத்தமிழர் வாழ்வில் இருந்து மறக்கவும் மன்னிக்கவும் முடியாத ஒன்றாய் இதனாலேயே தன்னை வரலாற்றில் நிலை நிறுத்திக் கொண்டது.

**காசாவில் மனிதப் பேரவலம்**

அன்று 2009 இல் முள்ளிவாய்க்காலில் பாரிய மானுடப் பேரவலம் நிகழும் போது உலகம் கண்மூடி மௌனித்திருந்தது. ஆயினும் இன்றைய காசா பேரவலத்தை உலகம் கண்டித்தாலும், அப்பாவி பாலஸ்தீன மக்களின் இழப்பை தடுக்க முடியாமல் கைகட்டி வேடிக்கை பார்க்க வேண்டிய நிலையில் உள்ளது. இந்த இரு காசா – முள்ளிவாய்க்கால் பேரவலம் காலப் பெருந்துயரம் என்றே வரலாற்றில் பதியப்படும்.

தரைவழியில் இஸ்ரேலுக்கும் ஹமாஸ் போராளிகளுக்கும் இடையிலான மோதல் காசாவில் நாளுக்குநாள் தீவிரமடைந்து வருவதால் சாதாரண பொது மக்கள் தரப்பிலான உயிரிழப்புகள் அதிகரித்து வருகிறது.

தீவிரமாக இஸ்ரேல் நடத்தி வருகின்ற ஆகாய மார்க்கமான தாக்குதல்களால் காசாவில் இதுவரை ஏற்பட்டுள்ள மனிதப் பேரவலங்கள் வார்த்தையில் வடிக்க முடியாதவையாக உள்ளன. குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றிப் பல்லாயிரக் கணக்கான சாதாரண மக்கள் மடிந்துள்ளனர். உயிரிழப்புகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. உலகின் பல நாடுகள் பெரிதும் கண்டித்தும் கவலையடைந்தும் உள்ளன.

மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்துவது சர்வதேச போர்க் குற்றம் என்பதை இஸ்ரேல் மறந்து, மீண்டும் கடந்த வாரம் காசா நகரின் இரண்டாவது பெரிய மருத்துவமனையான அல் குத்ஸ் மருத்துவமனை தாக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் பலியான மக்களின் பரிதாபங்கள் விவரிக்க முடியாதவையாகும்.

காசா நகரின் இரண்டாவது பெரிய மருத்துவமனையான அல் குத்ஸ் மருத்துவமனை தொடர்ச்சியாக தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

வடக்கு காசாவில் உள்ள அல் குச் மருத்துவமனையில் இருந்து இதுவரை பல நூறு நோயாளிகளும், மருத்துவமனையை சுற்றி தங்கி இருந்த பல்லாயிரம் மக்களும் அந்த பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது.

தொடரும் மோதல்களால் காசாவில் பத்து லட்சம் குழந்தைகளின் உயிர்கள் உத்தரவாதமின்றி இருப்பதாக சர்வதேச குழந்தைகளை பாதுகாக்கும் தன்னார்வ அமைப்பு கூறியுள்ளது.

**மருத்துவமனைகள் மீது தாக்குதல்**

அத்துடன் மருத்துவமனைகளில் மருந்துப் பொருள்கள் பற்றாக் குறையால் பலருக்கு சிகிச்சை அளிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. மருந்துப் பொருள்கள் பற்றாக்குறை நீடிக்கும் பட்சத்தில் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

50,000 கர்ப்பிணிகள் போதிய மருத்துவ உதவிகள் இல்லாமல் தவிக்கிறார்கள் என்று இந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

ஒருபுறம் மருந்துகளின் தட்டுப்பாடு, மறுபுறம் இஸ்ரேலிய இராணுவத்தின் தொடர்ச்சியான தாக்குதல் என காசா மக்களும் குழந்தைகளும் இருபெரும் சிக்கல்களுக்கு மத்தியில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காசாவில் இருக்கின்றனர்.

இந்த நிலையில் வடக்கு காசா பகுதியில் உள்ள பாடசாலைகள், மருத்துவமனைகள், பள்ளிவாசல்களும் தாக்குதலுக்குத் தப்பவில்லை எனக் கூறப்படுகிறது. இந்த நிலையில் காசாவுக்குள் செல்லும் வீதிகள் சேதம் அடைந்துள்ளதால், நிவாரணப் பொருள்கள் காசாவுக்குள் செல்லும் நிலைமை கடினமாகியுள்ளது.

இருதரப்பினரும் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி வருகின்றமையால், காசாவில் இடம்பெறுகின்ற சாதாரண பொது மக்கள் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளது. உண்மைத் தரவுகள் தெரியாத படு இழப்புகள் தொடர்பாக இஸ்ரேலும் ஹமாஸ் அமைப்பினரும் ஒருவர்மீது ஒருவர் குற்றம் சாட்டி வருகின்றனர்.

காசா சுகாதாரத்துறை தகவலின் படி, அங்கு சுமார் பத்தாயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் 25ஆயிரம் பேர் காயமடைந்து உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த எண்ணிக்கை இதனைவிட அதிகமென்றே தெரிவிக்கப்படுகின்றது. இந்த இழப்புகளை நிறுத்தக் கோரியும், இஸ்ரேல் மீதே உலகநாடுகள் பலவும் குற்றம் சுமத்துகின்றன.

**கொத்துக் கொத்தாய் கொல்லப்பட்ட தமிழர்**

2008 இன் இறுதிப் பகுதியிலும், 2009 ஆரம்பத்திலும், ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கை அரச படைத்துத்துறையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் போர் நடைபெற்றது.

**(13ஆம் பக்கம் பார்க்க)**

# முள்ளிவாய்க்கால் - காசா பேரவலம்:

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)



மேற்குலகின் உதவியுடன் அதி நவீன ஆயுதங்கள் இரக்கமே இல்லாது முள்ளிவாய்க்கால் மண் மீது வீசப் பட்டன. அண்டை நாடு முதல் ஐ.நா. சபைவரை வேடிக்கை பார்த்து நிற்க, பேரினவாத அரசின் கொடூர வன்செயலால் பிஞ்சுக் குழந்தை முதல் வயதானவர்கள்வரை குரல்வளை நசிக்கப்பட்டும் உயிரோடு புதைக்கப்பட்டும் சித்திர வதைகளுக்கு உள்ளாக்கப்பட்டும் கொல்லப்பட்டிருந்தனர் .

தமிழீழ தனிநாடு விடுதலை கோரி 1956 இலிருந்து அகிம்சைப் போராட்டங்களிலும், பின்னர் 2009 வரை ஆயுதப் போராட்டத்தின் இறுதிக் கட்டம் முள்ளிவாய்க்காலில் பாரிய மனிதப் பேரழிவுடன் தமிழர்களின் ஈழப் போராட்டம் மௌனிக்கப்பட்டது.

இத்தனைக்கும் தமிழ் பேசும் மக்கள் கேட்டது அவர்கள் நிலம் அவர்களுக்கு வேண்டும் என்பதேயாகும். இதை ஏற்க மறுத்த பேரினவாத அரசு தமிழ் மக்களை மேற்குலகின் துணையோடு இரக்கமே இல்லாமல் முள்ளிவாய்க்காலில் அழித்தொழித்தது.

இன்றைய காசா நிலவரமும் தமிழர்கள் சொந்த நிலங்களில் இருந்து விரட்டப்பட்டமை போல பாலஸ்தீனர்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

### பல்லாயிரம் குழந்தைகள் மரணிக்கும் அபாயம்

இஸ்ரேல் இராணுவம் நடத்திய விமானப்படைத் தாக்குதலில் இதுவரை காசா நகரத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட கட்டடங்கள் மொத்தமாகச் சிதைந்துள்ளன என்று கூறப்படுகிறது. இதுவரை 3500 பாலஸ்தீன குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர் என்று பாலஸ்தீன தரப்பில் கூறப்பட்டுள்ளது.

காசாவில் ஹமாஸ் கட்டுப்பாட்டில் உள்ள பாலஸ்தீனிய அதிகாரிகள், இந்த வான்வழித் தாக்குதல் வேண்டுமென்றே நடத்தப்பட்டதாகக் கூறி இஸ்ரேலைக் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் இஸ்ரேல், தாம் அதில் ஈடுபடவில்லை எனத் தொடர்ந்து மறுத்து வருகிறது.

இதேவேளை, ஐந்து நிமிடத்துக்கு ஒரு பாலஸ்தீன குழந்தை மரணிப்பதாக மத்திய கிழக்கு ஆசியாவை கொண்டு இயங்கும் மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன. இதுவரையில் கொல்லப்பட்டவர்களில் நாற்பது சதவீதமானோர் குழந்தைகள் என காசாவின் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

காசா மருந்துகளின் தட்டுப்பாடு, மறுபுறம் இஸ்ரேலிய இராணுவத்தின் தொடர்ச்சியான தாக்குதல் என காசா மக்களும் குழந்தைகளும் பாரிய சிக்கல்களுக்கு மத்தியில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காசாவில் இருக்கின்றனர்.

### போர்க் குற்றமும் இனப்படுகொலையும்

இஸ்ரேல் தற்போது பாலஸ்தீனத்தில் நடத்தும் போரை பல்வேறு நாடுகளும் கண்டித்து, போர்க் குற்றமாக வெளிப் படுத்தி உள்ளனர். ஆயினும் ஈழத்தில் போரின் இறுதிக் கட்டத்தில் ஏறத்தாழ 40,000 பொதுமக்கள்வரை இறந்தனர் என்று ஐக்கிய நாடுகளின் அறிக்கை தெரிவித்தது. இவர்களில் பெரும்பாலானோர் இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாடற்ற ஏவுகணைத் தாக்குதல்களில் அகப்பட்டு இறந்தனர் என்று அவ்வறிக்கை தெரிவித்தது.

தமிழர் மீதான போர்க் குற்றங்கள் இழைத்ததாக இலங்கை அரசு மீது குற்றம் சாட்டப்பட்டது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம் இலங்கை அரசு இழைத்ததாகக் கூறப் படும் போர்க் குற்றங்களை தற்போது விசாரணைக்கு உட்படுத்தி இருந்தாலும் கொல்லப்பட்ட, காணாமல்போன தமிழர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை.

ஈழத்தில் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த கோர நிகழ்வுகளைப் போலவே, இராணுவ முற்றுகைக்குள் காசா முடங்கி, இஸ்ரேலின் போர் குற்றம் தொடர்கிறது.

உலகின் மனச்சாட்சியும் மௌனித்திருக்க, ஐ.நா.சபையின் தோல்வியை வெளிப்படுத்தும் வண்ணம் இஸ்ரேலின் கோரத் தாண்டவம் அரங்கேறுகிறது.

நாங்கள் விலங்குகளுடன் போராடுகிறோம், அதன்படி செயல்படுகிறோம் என்று ஹீப்ரு மொழியில் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலண்ட் கூறியுள்ளார். அத்துடன் காசா மீது முழு தரைவழிப் போரை இஸ்ரேல் அதிகார பூர்வமாக நடத்துகிறது.

அன்று முள்ளிவாய்க்காலிலும், இன்று காசாவிலும் நிகழும் இனப்படுகொலை பேரவலமானது முடிவில்லாது தொடர்கின்றது. அப்போது முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நிறுத்தாமல் உலகம் கண்மூடி மௌனித்திருந்தது. ஆனால் இன்றைய காசா பேரவலத்தை உலகம் கண்டித்தாலும், போரைத் தடுக்க முடியாமல் கைகட்டி வேடிக்கை பார்க்க வேண்டிய நிலையில் உள்ளமை கவலைக்குரியதே.

# கன்னியாவில் மூடிக் கிடக்கும் சிவன் கோயில்!

கன்னியா வெந்நீர் ஊற்று வளாகத்தில் அமைந்துள்ள சிவன் கோயில் பூட்டு போட்டு மூடப்பட்டு காணப்படுகிறது.

இந்த காட்சி அங்கு செல்லும் இந்துக்கள் மத்தியில் மிகுந்த கவலையை அளிக்கிறது.

அங்கு சென்று பொறுப்பாளரிடம் விசாரித்த பொழுது பூசாரி தான் பூட்டி இருக்கிறார் என்றும் நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் அது பூட்டப்பட்டு உள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.

சுற்றுலா செல்லும் இந்துக்கள் பூட்டிய கோயிலுக்கு வெளியே நின்று சிவனை வழிபட்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.





# கிழக்கு பிரதம செயலாளர் கல்முனை மாநகர சபைக்கு!

(ஏ.எஸ்.மௌலானா)

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்னாயக்க நேற்று பிற்பகல் கல்முனை மாநகர சபைக்கு திடீர் விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது மாநகர சபையின் நிர்வாக செயற்பாடுகள் குறித்து நேரடியாக கண்டறிந்து கொண்ட பிரதம செயலாளர், மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தலைமையில் அதிகாரிகளுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் மாநகர சபையில் நிலவும் குறைபாடுகள் மற்றும் தேவைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் கல்முனை மாநகர சபையின் அண்மைக்கால முன்னேற்றகரமான செயற்பாடுகளுக்கு பிரதம செயலாளர் பாராட்டும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச். ஜௌஸி, கணக்காளர் கே.எம்.றியாஸ், நிர்வாகப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வரன், நிதி உதவியாளர் சசி ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

# சிங்களம் பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

( வி.ரி. சகாதேவராஜா)

இலங்கை அரசின் அரச கரும மொழி கொள்கையை அமுல்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் அரச கரும மொழிகள் திணைக்களத்தால் நிந்தவூர் கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடத்தப்பட்ட 150 மணித்தியாலங்களைக் கொண்ட சிங்கள மொழிக்கற்கை நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த 96 ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது,

இந்த நிகழ்வு நிந்தவூர் அல் அஷ்ரக் மத்திய மகா வித்தியாலயத்தின் காசிமி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தப் பாடநெறிக்கு அரச கரும மொழிகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பிரின்ஸ் சேனாதீர, கிழக்கு மாகாண அரச கரும மொழிகள் திணைக்களத்தின் இணைப்பாளர் ஜே.பி.பல்லவி ஆகியோர் அனுமதியை வழங்கினர்.

இந்த நிகழ்வில், பிரதம அதிதிகளாக நிந்தவூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம். சாஜித், நிந்தவூர் கோட்ட முன்னாள் கல்விப் பணிப்பாளர் எம்.ஷரிபுடீன் ஆகியோர் கலந்துகொண்டனர். கௌரவ அதிதிகளாக நிந்தவூர் அல்-அஷ்ரக் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் அப்துல் கபூர் கலந்து கொண்டார்.



# சித்திர முத்திரைகள் என்னும் ஓவிய, கைவினைக் கண்காட்சி!

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் 'சித்திர முத்திரைகள்' என்னும் ஓவிய, கைவினைப் பொருள்களின் கண்காட்சி நாளை 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 05 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கலைத்தூது அழகியல் கல்லூரியில் சித்திரப் பாடத்தையும் ஏனைய நுண்கலைப் பாடங்களையும் பயிலும் மாணவர்களது ஆற்றல்களை வெளிக்கொணரும் முகமாக இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த பல வருடங்களாக கண்காட்சி நடத்தப்பட்டு வருகின்றது. இக்கண்காட்சியில் அயல் பாட சாலைகளில் சித்திர பாடத்தைப் பயிலும் மாணவர்களது ஓவிய, கைவினைப் பொருள்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

'சித்திர முத்திரைகள்' கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும். இதன்போது பிரபல ஓவியரும் தென்மராட்சி கல்வி வலய அழகியல் பாட ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான கோ.கைலாசநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

இக் கண்காட்சிக்கான அனுசரணையை திருமறைக் கலாமன்றத்தின் மூத்த அங்கத்தவர் கலாபூஷணம் அமரர் அ.யோசேப் அவர்களின் குடும்பத்தினர் வழங்குகின்றனர்.



## தென் கிழக்கு பல்கலைக்கழகத்தில்

# மரம் நடுகை, கௌரவிப்பு, சான்றிதழ் வழங்கல்!

(நூருல் ஹுதா உமர்)

நூலக சேவையில் கடந்த 25 வருடங்களை பூர்த்தி செய்த ஊழியர்களின் கௌரவிப்பும் , ஸ்தாபகர் தின நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், மர நடுகையும் தென்கிழக்கு பல்கலைக்கழக முன்றலிலும் நூலக கேட்போர் கூடத்திலும் இடம்பெற்றன.

கடந்த 28 வருடங்களாக தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகத்தில் கடமையாற்றிய ஊழியர்களின் விசேட ஒன்றுகூடல் சிரேஷ்ட பதவி நிலை உத்தியோகத்தர் சி. எம். ஏ. முனாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் விசேடமாக அம்சமாக மர நடுகை நிகழ்வும் அத்துடன் தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகத்தில் 1995 ஆம் ஆண்டு ஒரு உதவி நூலகராக நியமனம் பெற்று இன்று வரை அதன் உருவாக்கத்துக்கும் வளர்ச்சிக்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்த தற்போதைய நூலகர் எம். எம். றிபாவூன் அவருடன் அன்றிலிருந்து இணைந்து சேவை ஆற்றிய ஊழியர்களான சி. எம். ஏ.முனாஸ், எஸ்.எம். எம். றமீஸ், ஏ.கே.அஷ்ரப், ஏ.எல்.எம். காசிம், எஸ். இன்பம் ஆகியோரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.



இந்த நிகழ்வில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகவும் பல்கலைக்கழக பீடாதிபதிகளான பேராசிரியர் எம்.எம். பாஸில், பேராசிரியர் எம்.ஏ.எல் அப்துல் ஹலிம், கலாநிதி எஸ்.சபீனா மற்றும் கலாநிதி எம்.எச்.ஏ.முனாஸ், பதிவாளர் எம்.ஐ. நௌபர், நிதியாளர் மங்கலேஸ்வரன் வேலை பொறியியலாளர் எம்.எஸ். எம். பசீல் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

சிறப்பு அதிதிகளாக பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர்களான எம். சி. எம் .அஸ்வர் , கலாநிதி எம். எம். மஸ்ரூபா, ஏ.எம் நஹ்பீஸ் , எஸ். எல். எம். சஜிர் மற்றும் நெட்வொர்க் மேனேஜர் எம்.ஜே.எம். சாஜித் மற்றும் பல்கலைக்கழக நூலக உத்தியோகத்தர்கள், பராமரிப்பு பிரிவு உத்தியோகத்தர்கள், நில அழகுபடுத்தல் பிரிவு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.










# சாய்ந்தமருது அஸ்ரப் வித்திக்கு கணினித் தொகுதி அன்பளிப்பு

(யூ.கே. காலித்தீன, நூருல் ஹுதா உமர்)

பேருவளையைச் சேர்ந்த ஆசிரியை மர்ஹூமா ஸீனத் நயிமா அமீன் ஞாபகார்த்தமாக அவரின் புதல்வர் பிராஸ்னால் பாடசாலைக்கு 5 கணினிகள் தொகுதிகளை அன்பளிப்புச் செய்யப் பட்டது.

பாடசாலை மாணவர்கள் ஐ.சீ.ரி. பாடத்தைக் கற்றுக் கொள்வதற்கு கணினிகள் இல்லாத குறை நீண்ட காலமாக இருந்தது.

இப்படசாலையின் தேவையை ஏற்று இப்பிரதேசத்தின் கணினி விற்பனை முகவர் பெல்கோன் சிஸ்டம் உரிமையாளர் முஹம்மட் முபீனிடம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் எமது பாடசாலைக்குக் கணினிகள் கிடைக்கப் பெற்றன என்று பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் எஸ்.எம். சுஜான் உட்பட பாடசாலையின் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பாடசாலை நலன்விரும்பிகள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# சாய்ந்தமருது பைன் ஸ்டார் வி.கவின் ஆண்டு நிறைவும் ரீ சேர்ட் அறிமுகமும்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது பைன் ஸ்டார் விளையாட்டு கழகத்தின் 15ஆவது ஆண்டு நிறைவு விழாவும் அமைப்பின் ட சேர்ட் அறிமுக நிகழ்வும் (29) ஞாயிற்றுக் கிழமை சாய்ந்தமருது அல்–ஜலால் பாடசாலையில் இடம் பெற்றன.

மயோன் குழுமத்தின் பூரண அனுசரணையில், பைன் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எம்.எம்.றியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மயோன் குழுமத்தின் பணிப்பாளர் றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.



நிகழ்வில் கௌரவ அதிதியாக லொய்ட்ஸ் குழும நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் ஐ.தே.கவின் பொத்துவில் தொகுதி அமைப்பாருமான யூ.கே.ஆதம்லெப்பை கலந்து கொண்டார். விஷேட அதிதிகளாக அல்– அமானா வெல்வெபயார் அசோசியேஷனின் பணிப்பாளர் ஏ.எல்.ஏ. பரீட், டவுன்ட்ரவல்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.ஜே.எம். ஜலீல், அக்ரோ இன்ஜினியரிங் என்.டி.டி எம்.பி.கலீல், மரண விசாரணை அதிகாரி ஏ.எல். ஜவாஹிர், கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபர் எம்.எம். இஸ்மாயில், ஏ.எல்.றபீக், எம்.ஜே.எம். ராஜுதீன், ரீ.கே. எம்.ஜலீல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நடிகர் விஜய் உட்பட புதியவர்கள் அரசியலுக்கு வருவது சிறந்தது!

## - அண்ணாமலை கருத்து


புதியவர்கள் அரசியலுக்கு வரும் போதுதான், இங்கிருக்கக்கூடிய அரசியல் நடைமுறைகள் அதிர்வுறும். புதியவர்கள் வரும்போதுதான் 'சிஸ்டம்' மாறும். நடிகர் விஜய் உட்பட நிறைய புதியவர்கள் அரசியலுக்கு வரட்டும். யார் அரசியலுக்கு வருவதற்கும் யாரும் தடையாக இருக்கக்கூடாது என்று பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது நடிகர் விஜய் அரசியலுக்கு வருவது தொடர்பாக கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், நான் யார் அரசியலுக்கு வந்தாலும் வரவேற்பேன் என்று முதலில் சொல்லிவிட்டேன். காரணம் மக்களை மேம்படுத்துவதற்காக யார் வேண்டும் என்றாலும் வரலாம். மக்களிடம் அவர்களின் கருத்துகளைக் கூறட்டும், மக்கள் தேர்ந்தெடுக்கட்டும்.

எனவே, யார் அரசியலுக்கு வருவதற்கும் யாரும் தடையாக இருக்கக்கூடாது. மக்களுக்கு தெரிவு இருக்க வேண்டும். ஜனநாயகம் என்பது தெரிவுதான். 3 கட்சிகள் இருக்கும் இடத்தில் 6 கட்சிகள் இருப்பது நல்லதுதான். அதிலிருந்து தங்களுக்குப் பிடித்தவர்களை மக்கள் தேர்ந்தெடுப்பார்கள்.





அதுவும் புதியவர்கள் அரசியலுக்கு வரும்போதுதான், இங்கிருக்கக்கூடிய அரசியல் நடைமுறைகள் அதிர்வுறும். புதியவர்கள் வரும்போதுதான் 'சிஸ்டம்' மாறும். பழைய கட்சிகளே 30 ஆண்டுகள், 40 ஆண்டுகள் திரும்பத்திரும்ப ஆட்சிக்கு வந்தால், அது தேங்கிய நிலையாகிவிடும். அதனால்தான் நீரோடைப் போல ஓடிக்கொண்டே இருக்க வேண்டும் என்று கூறுவார்கள்.

நடிகர் விஜய் உட்பட நிறைய புதியவர்கள் அரசியலுக்கு வரட்டும். அவர்கள் தங்களது மாற்று அரசியல் கருத்துகளை மக்களிடம் தெரிவிக்கட்டும்.

இறுதியில் தமிழக மக்கள் முடிவு என்ன எடுக்கிறார்களோ, அதை ஏற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார்.

# 'நீட்' தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்க அரசியல் கட்சிக்கு உரிமை உள்ளது!

## - உயர் நீதிமன்றம் கருத்து

'நீட்' தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்க அரசியல் கட்சிகளுக்கு உரிமை உள்ளது என்று சென்னை உயர் நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. 'நீட்' தேர்வு விடயத்தில் மத்திய அரசு ஏதேனும் முடிவெடுத்து, அது மாணவர்கள் நலனுக்கு விரோதமாக அமைந்தால் வழக்கு தொடரலாம் என்றும் தெரிவித்துள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், தேசிய மக்கள் சக்தி கட்சித் தலைவர் வழக்கறிஞர் எம்.எல்.ரவி தாக்கல் செய்த மனுவில், 'நீட்' தேர்வுக்கு எதிராக 50 லட்சம் கையெழுத்துக்களை பெறும் இயக்கத்தை தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கியுள்ளார். இந்த இயக்கத்தில் இணைந்து கையெழுத்திடும்படி பாடசாலை மாணவர்கள் நிர்பந்திக்கப்படுகின்றனர்.

'நீட்' தேர்வு தொடர்பாக மத்திய அரசு இயற்றிய சட்டத்தை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. அந்த சட்டத்துக்கு எதிராக மாநில அமைச்சர், போராட்டம் அறிவிக்க முடியாது. நீட் தேர்வுக்கு எதிராக, கையெழுத்து இயக்கம் தொடர்பாக அரசு எந்த அறிவிப்பும் வெளியிடாத நிலையில், இதை அரசின் கொள்கையாக கருத முடியாது.

இந்திய அரசியலமைப்பின் மீது உண்மையும், மாறா பற்றும் கொண்டிருக்கிறேன் என பதவியேற்றுக் கொண்ட அமைச்சர், சட்டத்துக்கு எதிராக போராட்டம் நடத்த முடியாது.

பாடசாலைகளில் இந்த கையெழுத்து இயக்கம் நடத்தப்படுகிறது. மாணவர்கள் நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்திட நிர்பந்தத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர். எந்த அனுமதியும் பெறாமல் நடத்தப்படும் இந்த கையெழுத்து இயக்கத்தை அமைச்சரே துவங்கியுள்ளதால், ஆசிரியர்களும், அதிகாரிகளும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

பாடசாலை வளாகத்தில் எந்த அரசியல் நடவடிக்கைகளையும் அனுமதிக்க கூடாது. நீட் தேர்வுக்கு தயாராக வேண்டாம் என்ற எண்ணம் மாணவர்கள் மனதில் ஏற்படும். மேலும், படிப்பில் இருந்து மாணவர்களின் கவனம் திசை திரும்பும். எனவே, பள்ளிகளில் கையெழுத்து இயக்கம் நடத்த அனுமதிக்க கூடாது என கல்வித் துறைக்கு உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி கங்காபூர்வாலா மற்றும் நீதிபதி பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், கையெழுத்து இயக்கத்தால் மனுதாரர் எப்படி பாதிக்கப்படுகிறார்? நீட் தேர்வு விடயத்தில் மத்திய அரசு ஏதேனும் முடிவெடுத்து, அது மாணவர்கள் நலனுக்கு விரோதமாக அமைந்தால் வழக்கு தொடரலாம். அரசியல் கட்சி எதிர்ப்பு தெரிவிக்க உரிமை உள்ளது. இதுபோன்ற பொதுநல வழக்குகளை தாக்கல் செய்ய ஒரு வரம்பு உள்ளது.

எனவே, இந்த வழக்கின் உண்மைத் தன்மையை நிரூபிக்க ஒரு லட்சம் ரூபாயை வைப்பு செய்தால் வழக்கை விசாரிப்போம் என நீதிபதிகள் தெரிவித்தனர். அப்போது, வழக்கை மீளப்பெறுகிறோம் என மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது

# ஈரானில் அபாயகரமான விகிதத்தில் மரண தண்டனைகள் நிறைவேற்றம்!

## - ஐ.நா. பொதுச் செயலாளர் கவலை

ஈரானில் அபாயகரமான விகிதத்தில் மரண தண்டனைகள் நிறைவேற்றப்படுகின்றன எனவும் நடப்பு ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் குறைந்தது 419 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு உள்ளது என்றும் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

சிறிய தவறுகளுக்கும் பெரிய தண்டனைகளைக் கொடுக்கக்கூடியவையாக அரபு நாடுகள் உள்ளன. ஈரானில், 22 வயது மாஷா அமினி என்ற இளம்பெண், அந்த நாட்டின் இஸ்லாமிய ஆடைக் குறியீட்டை மீறினார் என கூறப்பட்டு கைது செய்யப்பட்டார்.

பின்னர் அவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. அவரது மரணம் அந்த நாட்டில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. நாடு தழுவிய போராட்டங்கள் நடைபெற்றன. அதில் பங்கேற்றதற்காக ஏழு பேர் தூக்கிலிடப்பட்டனர் என ஐ.நா பொதுச் செயலாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் நீதித்துறை நடவடிக்கைகள், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் நியாயமான விசாரணை நடைபெறவில்லை என்றும் உரிய நடைமுறைள் பின்பற்றப்படவில்லை எனவும் அன்டோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.



குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு சரியான நேரத்தில் சட்ட அணுகல் நிராகரிக்கப்பட்டது எனவும் சித்ரவதை காரணமாக ஒப்புதல் வாக்குமூலங்கள் பெறப்பட்டிருக்கலாம் என்றும் ஐ.நா. அறிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 7 மாதங்களில் தூக்கிலிடப்பட்ட 239 பேரில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக தூக்கிலிடப்பட்டுள்ளனர். இது கடந்த ஆண்டு இதே காலத்தோடு ஒப்பிடும்போது 30 வீதத்துக்கும் அதிகமாகும்.

மாஷா அமினி மரணத்தை அடுத்து, செப்டம்பர் 17, 2022 முதல் பெப்ரவரி 8, 2023 வரையிலான காலகட்டத்தில் ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றதற்காக 20 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் தகவல் திரட்டி உள்ளது என ஐநா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படையின் துணைத் தளபதியின் கூற்றுப்படி, கைது செய்யப்பட்டவர்களின் சராசரி வயது 15 என மதிப்பிடப்பட்டிருப்பதால், கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் குழந்தைகளாக இருக்கலாம் என அன்டோனியோ குட்டரெஸ் அச்சம் தெரிவித்துள்ளார்.

போராட்டங்களின் போது கைது செய்யப்பட்ட 22 ஆயிரம் பேர் மன்னிக்கப்பட்டனர் என அரசு கூறினாலும், அவர்கள் வேறு காரணங்களுக்காக மீண்டும் கைது செய்யப்பட்டிருக்கலாம் என்றும் ஈரான் அரசு கூறுவதை உறுதிப்படுத்துவது கடினம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து மரண தண்டனைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும், மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டும், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் அனைத்து மக்களையும் விடுவிக்க வேண்டும், பெண்கள் மற்றும் சிறுமிகள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் உட்பட அனைவரும் கருத்து சுதந்திரத்துக்கான உரிமைகளை சட்டபூர்வமாக பயன்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட வேண்டும் என்று ஈரானை ஐ.நா. பொதுச் செயலாளர் வலியுறுத்தி உள்ளார்.

# ஹமாஸ் - இஸ்ரேல் இடையே போர் நிறுத்தம் தேவை: பைடனின் கருத்து குறித்து வெள்ளை மாளிகை விளக்கம்

இஸ்ரேல் – ஹமாஸ் இரு தரப்புகளுக்கும் இடையில் இடம்பெறும் போர் நிறுத்தப்பட வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கோரிக்கை விடுத்துள்ளார் என செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், பைடனின் கருத்து குறித்து வெள்ளை மாளிகை விளக்கம் கொடுத்துள்ளது.

பாலஸ்தீனத்தின் காசா பகுதி மீதான இஸ்ரேல் இராணுவத்தின் தாக்குதல் தீவிரமடைந்திருக்கிறது. ஹமாஸின் முக்கிய தலைவர்களை குறி வைத்து அழிக்கிறோம் என்ற பெயரில் இஸ்ரேல் இராணுவம் கண்மூடித்தனமாக காசா பகுதியில் தாக்குதல் நடத்தி வருகிறது என குற்றச்சாட்டுகள் எழுந்து வருகின்றன. இஸ்ரேல் தாக்குதலில் குழந்தைகள், பொதுமக்கள் அதிகளவில் உயிரிழந்துள்ளனர் என்ற குற்றச்சாட்டும்



நிலவுகிறது. போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சைகூட பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் காசா பகுதியில் இருக்கும் மக்களை பாதுகாக்க வேண்டும் என ஆங்காங்கே பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், மினியாபோலிஸ் நகரில் சுமார் 200 பேர் அடங்கிய பொது மக்கள் மத்தியில் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார். அப்போது, பெண் ஒருவர் குறுக்கிட்டு, போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். இதனால் நெருக்கடிக்கு உள்ளான ஜோ பைடன், 'ஹமாஸ் – இஸ்ரேல் இடையே போர் இடைநிறுத்தம் தேவை. பணயக் கைதிகளை மீட்பதற்கு தோதாக கால அவகாசம் தேவை எனத் தெரிவித்துள்ளார். பைடனின் இந்த கருத்து வைரலான நிலையில் அது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர். 'வெளிநாட்டினர் வெளியேறும் வகையிலும், பொதுமக்களுக்கு உதவி கிடைக்கும் வகையிலும் இஸ்ரேல்–ஹமாஸ் போரில் மனிதாபிமான இடைநிறுத்தம் தேவை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும் என அவர்கள் விளக்கியுள்ளனர்.